"மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச்செய்தார்"(ரோமர் **8:4**) என்று பவுல் அப்போஸ்தலன் அறிவுறுத்துகிறார். தேவனுடைய பிரமாணத்தை தங்களுடைய உடன்படிக்கைக்கு உட்பட்டு கடைப்பிடிக்க சுபாவ இஸ்ரயேலரால் கூடாமற் போனபோதிலும், சுவிசேஷசபையாகிய நாம், நமது உடன்படிக்கைக்கு கீழ் அதை கடைப்பிடிக்கமுடியும். சுவிசேஷயுகத்துக்கான தேவனுடைய ஒப்பந்தத்தின்படி புதியசிருஷ்டிகள் மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றனர். இவர்களது மாம்சம் மரித்ததாகக் கருதப்படுகிறது. புதியசிருஷ்டிகள் தேவனுடைய குடும்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் அதேவேளையில், அவர்கள் தொடர்ந்து அபூரண மாம்ச சரீரத்திலேயே இயங்கும்படி அனுமதிக்கப்படுகின்றனர். இந்த சரீரத்தை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க தன்னால் இயன்றதைச் செய்து, தேவமகிமையை விளங்கச்செய்யவேண்டும். அவன் தன் இருதயத்தில், தன் சிந்தையில், தன் முயற்சிகளில், புதிய சிருஷ்டியாக இருந்து, அதன்படிசெய்து, ஒருபுதிய சிருஷ்டியாக தேவனுடைய பிரமாணத்தை பூரணமாக கடைப்பிடிக்கலாம்.

அழிந்துபோகும் சரீரத்தின் அபூரண செயல்பாடுகள் எதையும் தீர்மானிக்கப்போவதில்லை. மாறாக, புதியசிருஷ்டியின் இருதய நோக்கங்களும் முயற்சிகளுமே தீர்மானிக்கப்படுகின்றன. பவுல் அப்போஸ்தலன் நமக்குக் கூறுவதுபோல், சரீரம் அடக்கப்பட்டு கீழ்ப்படுத்தப்பட வேண்டும். சபையைப் பொருத்தவரையிலும் தெய்வீக பிரமாணத்தின் நியாயத்தீர்ப்பின்கீழ், தெய்வீக பிரமாணத்தைக் கொடுத்தவரிடத்தில், புதியசிருஷ்டி ஜீவித்திருக்கும் அல்லது மரித்திருக்கும். நமது திறவு வசனத்திற்கு இணக்கமாக அப்போஸ்தலர் பவுல் தரும் கருத்து யாதெனில், உலகமோ, சகோதரரோ அவனை நியாயந்தீர்க்க திறனற்றவர்கள் என்பதேயாகும். கர்த்தரால் மட்டுமே இருதயத்தையும் அதன் எல்லா நிலைமைகளையும் எதிர்த்துப் போராடவேண்டிய சோதனைகளையும் பலவீனங்களையும் அறியவும், முறையாக நியாயந்தீர்க்கவும் முடியும். "நானும் என்னைக்குறித்து தீர்ப்புச் சொல்லுகிறதில்லை"(**1**கொரிந் **4:3**) என்று பவுல் அப்போஸ்தலனும் தீர்மானமாகக் கூறுகிறார். கர்த்தருடைய குழந்தைகளாக சுத்த மனசாட்சியின்படி நடக்கிறேன் என்று கூறுவோர், நாம் இவ்வாறு நடக்க உண்மையாகவே கடும் முயற்சி செய்கிறோம் என்றால், பிறரை குறைகூறி தீர்ப்பிடவோ, நம்மைநாமே ஆகாதவனென்று தீர்க்கவோ கூடாது. அனுதினமும் இலக்கைநோக்கி ஓட நோக்கங்கொண்டு, கர்த்தருடைய கிருபையின் சகாயத்தினால் பரிசுத்தஆவியின் கனிகளை விளையச்செய்யவும் நம் குருவுக்கு ஊழியம் செய்யவும் நம்மால் இயன்ற அளவுசெய்து, முடிவுகள் அனைத்தையும் அவரிடமே விட்டுவிடுவோமாக.

## R 2417

## *முன்பொரு காலத்தில்*

ஒருகாலத்தில் நான் ஆசீர்வாதம் தேடியே அலைந்தேன்
இப்போதோ என் ஆண்டவரை நான்
கண்டுகொண்டேன் ஒரு காலத்தில் நான் உணர்ச்சிகளைத்
தேடிக்கொண்டிருந்தேன் இப்போதோ அவர்
வார்த்தைகளை நான்
கண்டுகொண்டேன்
ஒருகாலத்தில் நான் மாம்சத்தில் சுகம்பெற வேண்டினேன்
இப்போதோ அவரையே நான் தேடிக்கொண்டேன்
ஒருகாலத்தில் நான் அன்பளிப்பை வேண்டிநின்றேன்
இப்போதோ அவர் என்ன கொடுக்கின்றாரோ
அதுபோதும் என்றேன்
ஒருகாலத்தில் அது என் வேலையாயிருந்தது
இப்போதோ அது அவர் வேலையாகிவிட்டது
ஒருகாலத்தில் நான் ஆற்றல்வேண்டியே பிடிவாதமாய்
கேட்டுவந்தேன்
இப்போதோ வல்லமையானவர் எனக்குள் வந்தார்
ஒருகாலத்தில் நான் எனக்காக மட்டுமே
வேலைகள் செய்தேன்
இப்போதோ இயேசுகிறிஸ்துவுக்காக மட்டுமே
ஒருகாலத்தில் என் முயற்சிகள் எல்லாம் வலிகளாயின
இப்போதோவென்றால் அவை ஓய்வாகி
நம்பிக்கை பெற்றன
ஒருகாலத்தில் நான் பாதி மட்டுமே மீட்படைந்திருந்தேன்
இப்போதோ நான் முழுவதும் மீட்கப்பட்டுவிட்டேன்
ஒருகாலத்தில் விடாமல் பற்றிக்கொண்டிருந்தேன்
இப்போதோ அவர்தான் என்னை இறுகப்பற்றிக்
கொண்டுள்ளார்
ஒருகாலத்தில் நான் பாதை மாறி சென்றுவந்தேன்
இப்போதோ என் மீட்பர் அவர் பாதையில்
என்னை நடத்துகிறார்
ஒருகாலத்தில் நான் தீவிரமாய் திட்டமிட்டேன்
இப்போதோ அவற்றை விசுவாச ஜெபமாக
மாற்றிவிட்டேன் ஒருகாலத்தில் நான் என்னை மிகவும்
விரும்பி கவனித்துக்கொண்டேன் இப்போதோ அவர் தான்
என்னை கவனித்துக்கொள்கிறார்
ஒருகாலத்தில் நான் விரும்பியதுமட்டுமே கிடைக்க
ஆசித்தேன்
இப்போதோ, இயேசு என்ன விரும்புகிறாரோ,
அதுமட்டுமே ஒருகாலத்தில் நான் ஓயாமல்
கேட்டுக்கொண்டிருந்தேன் இப்போதோ, நான் முடிவின்றி
புகழுகிறேன் ஒருகாலத்தில் நான் இயேசுவை மட்டுமே
நம்பினேன் இப்போதோ அவரையே என்னுடையவராக்கி
விட்டேன் ஒருகாலத்தில் என் விளக்கு
அணைந்துகொண்டிருந்தது இப்போதோ பிரகாசமாய்
ஜொலிஜொலிக்கிறது ஒரு காலத்தில் நான் மரணத்திற்காய்
காத்திருந்தேன் இப்போதோஅவர் பிரசன்னமாக்குதலை
புகழ்கிறேன் ஒருகாலத்தில் நான் நம்பிக்கையற்றே
இருந்துவந்தேன் இப்போதோ நான் திரைக்குள்ளே
வந்துவிட்டேன்.

---